நாள்: 16.09.2025
O.S. No. 47/2020

வா.சா.1

பெயர்: செல்வி, க/பெ. மோகன்

<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் என் கணவருடன் தான் வசித்துவருகிறேன் என்றால் சரிதான். என் கணவருடன் தஞ்சை சாலையில் உள்ள வீட்டில் வசித்துவருகிறேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1988 ல் திருமணம் நடைபெற்றது. நான் திருமணம் முடிந்து கணவர் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் நான் காதல் திருமணம் செய்து கொண்டதால் என் தகப்பனார் வீட்டிலேயே என் கணவருடன் வசித்துவந்தேன். என் கணவர் பிறந்த ஊர் எது என்றால் வேதாரண்யம் ஆகும். நான் என் கணவர் ஊரான வேதாரண்யத்தில் தான வசித்து வருகிறேன் என்றாலும் இந்த வழக்கிற்காக தஞ்சை சாலையில் வசித்து வருகிறேன் என பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் தாயார் மற்றும் உடன் பிறந்த சகோதரி ஆகியோருடன் சேர்ந்து நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் தாவா சொத்து ஜமாத்துக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி சொந்தமானது என கூறியுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய அசல் வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் தாவா சொத்து பிரதிவாதிகளின் நிர்வாக சபைக்கு சாதகமாக நீதிமன்ற தீர்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறிவிட்டு தற்போது இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூன்று முறை என் தகப்பனார்க்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டு நான்காவது முறை என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லததால் மேற்முறையீடு செய்யப்படவில்லை அதனால் பிரதிவாதி நிர்வாக சபைக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது. தீர்ப்பிற்கு பிறகு எங்களை நிர்வாக சபை எங்களை காலிசெய்ய சொல்லவில்லை.

என் அசல் வழக்குரையில் தாவா சொத்து அரசு புறம்போக்கு என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்தின் பேரில் எவ்வித உரிமை ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என்னால் குறியீடு

செய்யபட்டுள்ள வா.சா.ஆ 7 மற்றும் 8 ஆவணங்கள் தண்டதீர்வை என்பதால் அது தாவா சொத்தில் எனக்கு உரிமை மூலத்தை ஏற்படுத்தாது என்றால் சரியல்ல.

என்னுடைய பிராதில் ஓர் இடத்தில் பிரதிவாதிகள் நிர்வாக சபைக்கு சொந்தமானது என்றும் மற்றொரு இடத்தில் அரசு புறம்போக்கு என்றும் முரண்பட்ட கட்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசு புறம்போக்கு சொத்துதான். தாவா சொத்தில் வாதிகள் ஆகிய எங்களுக்கு எவ்வித அனுபவமும் இல்லாத காரணத்தால் தான் முரண்பட்ட சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.09.16 06:36:32 +0530